STC.No.575/2020 நாள் 03.04.2024

P.W.1 திரு.பிரபு, த/பெ.ராமசாமி

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்குவிசாரணை :</u>**

1) நான் 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து ஸ்டேட் பேங்க் இந்தியா பொங்கலூர் கிளையில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எதிரிக்கு லோன் கொடுத்த வருடம் 2019 என்றால் சரிதான். அப்போது மேலாளராக ஸ்ரீனிவாசமூர்த்தி இருந்தார். லோன் கொடுத்தபோது என்ன நடந்தது என்ற விபரம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆவணங்களை பார்த்து நான் சாட்சியம் அளிக்கிறேன். எதிரிக்கு எங்களது வங்கியிலிருந்து தனிநபர் கடன் (MCTL Express Credit Loan) வழங்கப்பட்டது என்றால் சரிதான். எதிரிக்கு லோன் கொடுத்தபோது எந்த பயனிற்காக எதிரி லோன் வாங்கினார் என்றால் சொந்த தேவைக்காக வங்கினார். குறிப்பிட்டு என்ன காரணத்திற்காக கடன் வழங்கப்பட்டது என்று நாங்கள் பார்க்கமாட்டோம். அவரது 6 மாத சம்பளம் வழங்கப்பட்ட பட்டியலை வைத்து நாங்கள் கொடுப்போம்.

2) எதிரி வாங்கிய லோனிற்கு எவ்வளவு சதவீத வட்டி என்றால் 15.05 சதவீதம் ஆகும். 15.05 சதவீதத்திற்கு வட்டி கணக்கீடு செய்து மாதம் மாதம் மாதத்தவணை தொகை வாங்குவோம் என்றால் சரிதான். லோன் வாங்குவதற்காக எதிரி எப்போது மனு கொடுத்தார் என்றால் 19.01.2019 ஆம் தேதியன்று கொடுத்தார். அன்றே தினமே எதிரிக்கு லோன் Sanction செய்தோம். Loan Sanction தேதியன்று எதிரியிடம் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான காசோலைகளை வட்டிக்காக நாங்கள் பெற்றுக்கொண்டோம் என்றால் சரிதான். இந்த வழக்கு காசோலை மேற்படி Loan Sanction தேதியில் வாங்கிய காசோலை என்றால் சரிதான். எதிரி 2019 ஆகஸ்ட் மாதம் வரை தவணை தொகையை கட்டியுள்ளார். எவ்வளவு கட்டியுள்ளார் என்றால் மாதம் மாதம் ரூ.15,946/– தொகை செலுத்தியுள்ளார். அதற்கான கணக்கு பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

3) மாதம் மாதம் தவணை கட்டவில்லை என்பதால் தான் மொத்த கடனையும் திரும்ப கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். எதிரி 2019 ஆகஸ்ட் மாதத்திற்கு பின்பு எதிரி தவணை தொகை கட்டிவில்லை என்பதற்கு வழக்கறிஞர்

அறிவிப்பு செய்துள்ளோமா என்றால் 11.03.2020 ஆம் தேதி அனுப்பினோம். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எதிரியின் வங்கி கணக்கு பட்டியல் மற்றும் 11.03.2020 தேதிய வழக்கறிஞர் அறிவிப்பு ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எதிரிக்கு தகவல் தெரிவித்தோமா என்றால் தகவல் தெரிவித்தோம். எந்த தேதி என்று எனக்கு தெரியவில்லை.

4) வழக்கு காசோலைகளை மூன்றையும் ஒன்றாக சேர்த்து ஒரே தேதியில் வசூலுக்கு தாக்கல் செய்ய காரணம் என்ன என்றால் 3 மாதம் தவணைகளை செலுத்ததால் வாராகடனாகிவிட்டது, அதனால் ஒரே தேதியில் 3 காசோலைகளை வசூலுக்கு தாக்கல் செய்தோம். எதிரி தற்போது வேலைக்கு செல்கிறாரா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. எதிரி வாங்கிய கடனிற்கு கடனை திருப்பி செலுத்துவதற்கான கால கெடு எத்தனை வருடம் என்றால் 6 வருடம் ஆகும். எனில் 2019 ஜனவரியில் கொடுக்கப்பட்ட கடனிற்கு 2025 ஜனவரி வரை கடனை திருப்பி செலுத்த கால அவகாசம் உண்டு என்றால் சரிதான். கால அவகாசம் முடிவதற்கு முன்பு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். எதிரினுடனான ஒப்பந்தத்தில் 3 மாதம் தொடச்சியாக தவணை செலுத்தவில்லை என்றால் நடவடிக்கை எடுப்போம் என்று குறிப்பிட்டுள்ளோம். சிவில் வழக்கு எப்போது தாக்கல் செய்தோம் என்றால் நான் வருவதற்கு முன்பாகவே தாக்கல் செய்துள்ளார்கள். அதன் எண் எனக்கு தெரியாது.

5) OS.No.167/2022 என்ற வழக்கை பல்லடம் சார்பு நீதிமன்றத்தில் எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்படுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் எதிரி ஆஜராகவே இல்லை. தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார். முதல் காசோலை தேதி 19.03.2020 என்றாலும், இரண்டாவது காசோலை தேதி 20.04.2020 என்றாலும் மூன்றாவது காசோலை தேதி 19.05.2020 என்றாலும் சரிதான். மூன்று காசோலைகளின் தேதிகளில் கொரோனா கால கட்டத்தில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட காலம் என்றால் சரிதான். வழக்கு காசோலைகளை வசூலுக்கு தாக்கல் செய்த 08.06.2020 ஆம் தேதியன்றும் கொரோனா கால கட்டத்தில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட காலம் என்றால் சரிதான். 05.06.2020 ஆம் தேதியன்று எதிரி வங்கிக்கு வந்து வழக்கு காசோலைகளை

பணமாக்க கொடுத்தார். அதற்கு முன்பு பல முறை அழைத்தும் எதிரி வரவில்லை. சில தளர்வுகள் ஏற்படுத்தப்பட்டு இருந்தது.

6) 05.06.2020 ஆம் தேதியன்று எதிரி வங்கிக்கு வந்து காசோலைகள் கொடுத்ததாக எனது புகாரிலும், வழக்கறிஞர் அறிவிப்பு, நிரூபணவாக்குமூலம் ஆகியவற்றில் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த விபரத்தை தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வங்கி பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. மார்ச் 2020 முதல் 6 மாத காலத்திற்கு கடன் தவணை தொகைகளை திருப்பி செலுத்துவதற்கு ரிசர்வ் வங்கியால் அவகாசம் கொடுக்கப்பட்ட காலம் என்றால் சரிதான். வட்டி கொடுப்பதற்கு மட்டுமே கால அவகாசம் கொடுத்து இருந்தார்கள். அசல் தொகைக்கு எந்த விலக்கும் கொடுக்கவில்லை. வழக்கு காசோலைகள் மூன்றுமே வட்டியுடன் சேர்ந்தது தான் என்றால் சரிதான். கொரோனா கால கட்டத்தில் ரிசர்வ் வங்கியால் கால அவகாசம் கொடுக்கப்பட்ட நிலையிலும் எதிரியை துன்புறுத்துவதற்காக வழக்கு காசோலைகளை தாக்கல் செய்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கொரோனா காலத்திற்கு 7 மாதத்திற்கு முன்பிலிருந்தே அவர் கட்டவில்லை என்பதால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

7) எதிரிக்கு வருமானம் இல்லாத கொரோனா கால கட்டத்தில் 3, 4, 5 மாதங்களுக்குண்டான மாத தவணைகளுக்காக வழக்கு காசோலைகளை பணமாக்க தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். எதிரி ஜீன் மாதம் வந்து காசோலைகளை கொடுத்ததால் அதற்கு முன்பான 3 மாதத்திற்கு மட்டுமே வட்டிக்கு வரவு வைக்கமுடியும், அதனால் அவ்வாறு தாக்கல் செய்யப்பட்டது. அதற்கு பின்பான வட்டியை சரியாக செலுத்துவதாக கூறினார். 2019 செப்டம்பர் மாதத்திலிருந்து தவமணை செலுத்தாத எதிரிக்கு அவர் கொடுத்த காசோலையை 2019 செப்டம்பர் மாதத்திலிருந்து வரவு வைக்கவேண்டும் என்றால் சரியல்ல. வாரா கடனாக கணக்கு மாறியதால் மொத்த நிலுவையிலிருந்து தொகை கழிக்கப்படுமே தவிர முதல் மாத தவமணையிலிருந்து கழிக்கப்படாது. எதிரி வாங்கிய கடன் எப்போது வார கடனாக மாறியது என்றால் 2019 டிசம்பர் மாத்தில் மாறியது. வழக்கு காசோலைகளை யார் பூர்த்தி செய்தது என்றால் எதிரியே பூர்த்தி செய்து கொடுத்தார். நாங்கள் அனுப்பிய 11.03.2020 ஆம் தேதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டு எதிரி

வங்கிக்கு வந்ததாரா என்றால் எனக்கு தெரியாது. உண்மையில் எதிரி வழக்கறிஞர் அறிவிப்புடன் வங்கிக்கு வந்து நிலுவை செலுத்துவதாக கூறினார் என்றாலும், அதனை வாங்க மறுத்து முழுதொகையையும் கேட்டோம் என்றால் சரியல்ல. தலைமை அலுவலகத்தை கேட்டு சொல்வதாக கால தாமதப்படுத்தியதால் கால தாமதமாக வழக்கு காசோலைகள் தாக்கல்செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

8) உண்மையில் வழக்கு காசோலைகள் கடன் தவமணைக்காக கொடுக்கப்பட்டது அல்ல என்றாலும், கடன் வாங்கும் போது ஆதரவிற்காக கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. இன்றும் வழக்கு காசோலைகள் தொகையான ரூ.47,838/– த்தை செலுத்த தயாராக உள்ளார் என்றால் அதனை ஏற்றுக்கொள்ளமுடியாது. வாரா கடனாக உள்ளதால் எங்களால் பெறமுடியாது. எதிரி செக்யூரிட்டிக்காக கொடுத்த காசோலையை தவறாக பயன்படுத்தி நாங்களாக பூர்த்தி செய்து எதிரிக்கு தெரியாமல் தாக்கல் செய்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கொரோனா காலகட்டத்தில் அரசு கொடுத்த சலுகைகளை எதிரிக்கு தரவில்லை என்றால் சரியல்ல. மாற்றுமுறை ஆவணச்சட்டத்தை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரி காசோலைகள் மோசடி குற்றம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றாலும், எதிரி விடுதலை செய்யதக்கவர் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2024.04.03 15:28:12 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.